அறப்போர் இயக்கம்

அகிம்சை வழியில் ஒரு துவக்கம்

21/09/2018

## பத்திரிகை செய்தி-தமிழக தகவல் ஆணையம் - ஒரு மக்கள் ஆய்வு

மாநில மற்றும் மத்திய தகவல் ஆணையத்தின் செயல்பாடுகளே எந்த ஒரு மாநிலத்தின் தகவல் அறியும் உரிமை சட்ட வெற்றி அல்லது தோல்வியில் முக்கிய பங்காற்றுகிறது, ஏனெனில் ஒருவர் நீதிமன்றத்தை அணுகும் முன்னர் அவருக்கு தகவல் ஆணையமே இறுதி மேல்முறையீட்டு அமைப்பாக இருக்கிறது.

இந்த ஆய்வின் நோக்கம் தமிழக தகவல் ஆணையத்தின் செயல்பாடுகள் பற்றி பகுத்தாய்வது, அதன் செயல்பாடுகள் பற்றிய தகவல் வழங்குவது, மேலும் அதன் தற்போதைய செயல்பாடுகளை எதிர்பார்த்த செயல்பாடுகளுடன் ஒப்பிடுதல் ஆகும். அதன் குறைபாடுகள் எப்படி தமிழகத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தையும் வெளிப்படைத்தன்மையை பாதிக்கிறது என்பதையும் இந்த ஆய்வறிக்கை எடுத்துரைக்கிறது. தமிழக தகவல் ஆணையம் செயல்பாடுகள் கடுமையான பின்னடைவு நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறது என்றும் இதனால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது பாதிக்கப்படுகிறது என்றும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது

**முக்கிய கண்டுபிடிப்புக்கள்:**

இரண்டாம் மேல்முறையீட்டை முடித்து வைப்பதற்கு இந்த ஆணையம் மிக அதிகமான கால அவகாசம் எடுத்துக் கொள்கிறது. சராசரியாக மேல்முறையீடு விசாரிக்கப்படுவதற்கு 15 மாதங்கள் ஒரு மேல்முறையீட்டாளர் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

தமிழக தகவல் ஆணையம் மேல்முறையீடுகளை ‘முதலில் வந்தது முதலில் விசாரிக்கப்படும்’ என்ற கொள்கையை பின்பற்றவில்லை என்பதும் சிலருக்கு மட்டுமே 3 மாதகாலத்திற்குள் விசாரணை நடந்து தீர்ப்பு கிடைக்கிறது. பெரும்பாலானோர் 6 மாதத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

நாம் பார்ப்பது என்னவென்றால், 18% மேல் முறையீட்டாளர்கள் ஒரு வருடத்திற்கு மேல் காத்திருக்க வேண்டியுள்ளது. 13% பேர் 10 முதல் 12 மாதங்களும் 24% பேர் 7 முதல் 9 மாதங்களும் 26% பேர் 4 முதல் 6 மாதங்களும் 20% பேர் மூன்று மாதங்களுக்கு குறைவான காலமும் காத்திருக்க வேண்டி உள்ளது. பெரும்பாலானவர்கள் மிக நீண்டகாலமே காத்திருக்க வேண்டி உள்ளது.

ஒவ்வொரு வருடமும் எத்தனை மேல்முறையீடுகள் விசாரிக்கப்படுகின்றன என்பதன் விகிதம் கடுமையாக சரிந்துள்ளது. 2016 ஆண்டின் முடிவில் தமிழக தகவல் ஆணையத்தின் கீழ் 1,135 மேல் முறையீட்டு மனுக்கள் விசாரணைக்காக காத்திருந்தது . அதே 2017 வருட முடிவில் 5,220 மனுக்கள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது !

2014 ஆம் ஆண்டு, ஒரு ஆணையர் ஒரு மாதம் சராசரி 165 மேல் முறையீடுகளை விசாரித்து முடித்தார். ஆனால் 2018 இல் ஒரு மாதம் ஒரு ஆணையர் சராசரியாக வெறும் 48 பேரின் மேல்முறையீடுகளையே விசாரித்து முடிக்கிறார்.

தகவல் ஆணையர்கள் மாதம் 267 முறையீடுகள் கையாள வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக இருக்கையில் வெறும் 48 முறையீடுகளுக்கு மட்டுமே விசாரணை செய்வது அவர்களின் செயல்பாடுகள் எவ்வளவு குறைவாக உள்ளது என்பதும் கடந்த சில ஆண்டுகளாக செயல்பாடுகள் எப்படி சரிந்து வருகிறது என்பதையும் காண்பிக்கிறது. இதுவே மிக அதிகமாக முறையீட்டாளர்களை காத்திருக்க வைக்கிறது.

பல மாநிலங்களில் தகவல் ஆணையங்கள் தனது முறையீட்டின் நிலையை முறையீட்டாளர் அறிந்து கொள்வதற்கான ஸ்டேடஸ் ட்ராக்கிங் (மனுவின் நிலை) முறைகளை வைத்திருக்கும்போது தமிழக தகவல் ஆணையம் அது போன்ற எந்த வசதியையும் முறையீட்டாளர்களுக்கு வழங்காதது அவர்களை கடும்சிரமத்துக்கு ஆளாக்குகிறது. தனது முறையீடு என்றைக்கு விசாரிக்கப்படும் என்பது பற்றி அவர்களால் தெரிந்து கொள்ளவே முடியாமல் இருக்கிறது.

தமிழக அரசின் கிட்டத்தட்ட அனைத்து துறைகளுமே தகவல் உரிமைச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டபடி வெளிப்படையாக தானே தகவல்களை வைப்பதில்லை. பிரிவு 4 இல் கூறியுள்ள தகவல்கள் முழுவதையும் தமிழக துறைகள் வெளிப்படையாக தனது வலைதளத்தில் வைக்காமல் இருக்கின்றன. இந்தப்பிரிவை செயல்படுத்துவதற்கு தமிழக தகவல் ஆணையம் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

ஆன்லைனில் தகவல்களை கோருவதற்கும் மேல் முறையீடு செய்வதற்கும் மத்திய அரசிலும் மற்ற பல மாநில அரசிலும் வாய்ப்பு உருவாக்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக அரசோ தமிழக தகவல் ஆணையமோ அதற்கான வாய்ப்பை இன்னும் உருவாக்காமலேயே இருக்கின்றன.

கடமை தவறும் தகவல் அலுவலருக்கு மிகக் குறைந்த அபராதம் விதிப்பது போன்ற செயல்கள் சட்டத்தை சரியாக செயல்படுத்தாமல் போவதற்கான வழியாகவே இருக்கிறது. குறைந்த பேர் மீது மட்டும் செலுத்தப்படும் அபராதத்தினால் பொது தகவல் அலுவலர்கள் பயமில்லாமல் தகவல் தராமல் இருக்கிறார்கள்.

தமிழக தகவல் ஆணையத்தின் செயல்பாடு, பொறுப்புடைத்தன்மை, மற்றும் வெளிப்படைத்தன்மை இவற்றில் உடனடியாக பெரிய முன்னேற்றம்

தேவைப்படுகிறது. வலுவில்லா செயல்பாடும் காலம் தாழ்த்தலும் பொதுமக்கள் இதன் மீது வைத்துள்ள நம்பிக்கையை குலைக்கிறது. இது தொடர்ந்தால் மக்களிடம் தகவல் பெறும் சட்டத்தை உபயோகப்படுத்தும் ஆர்வமே குறைந்துவிடும். ஆகவே இந்த முன்னேற்றம் அவசரகதியில் செயல்படுத்தப்பட வேண்டும்.

**பரிந்துரைகள்:**

இரண்டாம் மேல்முறையீடு வந்து 90 நாட்களுக்குள் விசாரித்து முடித்து வைக்கப்பட வேண்டும். அவசர மனுக்கள் 48 மணி நேரத்திற்குள் முடித்து வைக்கப்பட வேண்டும்.

இரண்டாம் மேல்முறையீட்டை முறையீட்டாளர் ட்ராக்கிங் செய்து அதன் நிலை என்ன என்பதை எப்போது வேண்டுமானாலும் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டும்.

அனைத்து துறைகளும் பிரிவு 4இன் கீழ் கொடுக்கப்பட்டவற்றை முழுமையாக நடைமுறைபடுத்தி தானாக தகவல்களை வெளிப்படையாக பதிவிட்டு வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் ஆன்லைனில் தகவல்களை கேட்க, முதல் மேல்முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீடு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்

தகவல் ஆணையர்கள் தலைமைத் தகவல் ஆணையர் ஆகியவர்களின் நியமனங்களில் முழுமையான வெளிப்படைத்தன்மை வேண்டும்

தகவல் தராத தகவல் அலுவலருக்கும் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கும் அபராதம் உள்ளிட்ட தண்டனைகள் போதுமான அளவு வழங்கப்பட வேண்டும்

இரண்டாம் மேல்முறையீட்டு ஆணையம் சட்டப்படி தகவலை தரச்சொல்லாத பட்சத்தில் முதல் மேல்முறையீட்டு ஆணையரை வரவழைத்து விசாரிக்க வேண்டும்.

மொத்தத்தில், தகவல் சட்டம் சரியாக இயங்குவதற்கு அடிப்படைத்தேவை தகவல் ஆணையம் சரியாக இருப்பது. ஆனால் தற்போது இந்த ஆணையம் இருக்கும் நிலையோ மிகவும் கவலை அளிக்கும்படி உள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் தகவல் சட்ட அமல்படுத்துதல் மற்றும் தமிழக அரசின் வெளிப்படைத்தன்மையே பாதிக்கப்படக்கூடும்.

வெளிப்படைத்தன்மையும் பொறுப்புடைத்தன்மையும் குறைவாக இருக்கும்பட்சத்தில் மக்கள் ஊழல் மற்றும் ஏற்றத்தாழ்வினால் பாதிக்கப்படுவர். ஆகவே தகவல் ஆணையமும் தமிழக அரசும் இந்த பிரச்சனையின் தீவிரம் உணர்ந்து துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜெயராம் வெங்கடேசன்
ஒருங்கிணைப்பாளர் – அறப்போர் இயக்கம் (Ph: 9841894700)